# ★ கொழும்பு நகர் இராணுவமயப்படுத்தப்படுகிறது

(கொழும்பு)
கொழும்புநகர் எங்கும் தற்போது இராணுவ மயப்படுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மிகத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
விடுதலைப் புலிகள் கொழும்பின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் அரசுத் தலைவர்கள், படைத் தளபதிகள். மற்றும் அரசியல்வாதிகளையும் தாக்கதிட்டமிட்டுள்ளதாக அண்மைக்காலமாக புலனாய்வுத்துறையினர் எச்சரித்து வந்ததை
[5ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5. 00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 18 இதழ் 117
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 01 - 6 - 1995

## கனேடிய அமைச்சர் கொழும்பு வருகை

(கொழும்பு)
கனடாவின் வெளிவிவகார அமைச்சர் றேமன் சான்ஸ் நேற்று காலை கொழும்பு வந்து சேர்ந்தார்.
ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கு பொறுப்பான இவர், வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், பிரதி அமைச்சர் டி. பி. விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்து நேற்று பேச்சுக்கள் நடத்தினார்.
இன்று பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்த ஏற்பாடாகியுள்ளது,
விடுதலைப்புலிகளையும் அரசதரப்பினரையும் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடச் செய்யும் முயற்சியின் ஒரு
[6 ம் பக்கம் பார்க்க]

## ★ இராணுவ தளபாடங்கள் பெற

# ஆயுத உற்பத்தி நாடுகளின் பிரதிநிதிகள் ரதவத்தை சந்திப்பு

## உதவத் தயாரென கூறுகின்றனர்

[கொழும்பு]
யுத்த உபகரணங்களை உற்பத்திசெய்யும் முன்னனி நாடுகள் இரண்டின் இரு சிரேஷ்ட தூதரக அதிகாரிகள், பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையுடன் இருகட்டப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இவர்கள்விடுதலைப்புலிகளின் ஏவுகணைத் தாக்குதல்களை முறியடித்து வெற்றி பெறத் தேவையான இராணுவ தளபாடங்களை இலங்கைக்கு வழங்க தயாராயுள்ளதாக தெரிவித்துள்ளனர்.
அண்மையில் இப்பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன. முதற் கட்டப்பேச்சுக்கள் மூன்றுமணி நேரமும் 2ம் சட்டப் பேச்சு இரண்டு மணி நேரமும் முழுமையாக நடைபெற்றுள்ளன.
புலிகள் போன்ற இயக்க
(6ம் பக்கம் பார்க்க)

## அரசு எதிர்நோக்கும் முக்கிய பிரச்னைகள்

[சென்னை]
தமிழர் பிரச்னைக்கு. விடுதலைப்புலிகளின் பங்குபற்றுதலின்றி அரசியல் தீர்வு காண முடியுமா? அப்படி ஒரு தீர்வு ஒன்றை கண்டாலும் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அதனை அமுல்படுத்த முடியுமா? சிறிலங்கா படைகளினால் விடுதலைப் புலிகளை இராணுவ நடவடிக்கை மூலம் இல்லாமல் செய்ய முடியுமா? ஆகிய கேள்விகளை தற்போது இலங்கை அரசு எதிர்கொள்ளும் பிரச்னை
(6-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தீர்வைவிட சமாதனபேச்சுக்கள் சிறந்தது

— கனேடிய அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)
இலங்கையில் சமாதான முயற்சிகள் ஏன் முறிவடைந்தன. சமாதான முயற்சிகளை மீண்டும் தொடங்க கனடா ஏதும் செய்யமுடியுமா என்பதை அறிய விரும்புவதாக இலங்கைக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள கனேடிய வெளியுறவுத்
[6ம் பக்கம் பார்க்க]

## திரியாயில் மோதல் சிப்பாய் உயிரிழப்பு

[திருகோணமலை]
திருகோணமலை - திரியாய் என்ற இடத்தில் நேற்றுமுன்தினமிரவு ரோந்து சென்ற இராணுவத்தினர்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார்.
கிழக்கில் தற்போது விடுதலைப்புலிகளின் தாக்குதல் அதிகரித்து வரும் இவ்வேளையில் தினமும் படையினர் கொல்
(6-ம் பக்கம் பார்க்க)

## ★ ஹொறவப்பொத்தானை முகாம் தகர்ப்பைத்தொடர்ந்து படைமுகாம் மூடப்பட்டது

[அநுராதபுரம்]
அநுராதபுரம ஹொரவப்பொத்தானை வாகல்கடவலவில் இராணுவ முகாம் ஒன்றின் மீது நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியபோது அங்கிருந்த படையினர் அனைவரும் தப்பியோடியுள்ளனர். இதனையடுத்து அந்த முகாம் உடனடியாகவே மூடப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.
இந்த முகாம் மீதானதாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர்.
[5ம் பக்கம் பார்க்க]

## வழமை நிலைக்கு விமானப்படைதிரும்பவில்லை

[கொழும்பு]
வடக்கு-கிழக்கு யுத்த முனையில் தரைப்படையினருக்கு உதவக்கூடிய அளவிற்கு விமானப்படையினர் இன்னும் வழமைக்கு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
ஏவுகணைத் தாக்குதலால் இரு அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு ஒருமாதமாகியும்யுத்தமுனையில் தரைப்படையினருக்கு உதவமுடியாத நிலையிலேயே விமானப்
[-6ம் பக்கம் பார்க்க]

## பனாகொடை முகாமை புலிகள் தாக்கலாம்

[கொழும்பு]
பனாகொடை இராணுவ முகாமை புலிகள் தாக்கலாமென புலனாய்வு துறையினர் எச்சரித்ததையடுத்து அதன் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
கொழும்பில் புலிகள் துறைமுகம், கட்டுநாயக்கா விமான நிலையம், களனிதிஸ்ஸ மின் நிலையம், சப்புகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையம் இரத்மலானை விமானப்படை முகாமையும் புலிகள் தாக்கலாமென எச்சரிக்கப்பட்டுள்ளது.
இதையடுத்து இவற்றின் பாதுகாப்பும் பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இங்கு வரும் வாகனங்களும் தீவிர சோதனைக்குட்படுத்தப் பட்டு வருகின்றன. -சி

## ★ நீர்கொழும்பில் நேற்றுக்காலை வங்கிக்கு கொண்டுவரப்பட்ட ரூ.9லட். துப்பாக்கிமுனையில்கொள்ளை

[நீர்கொழும்பு]
நீர்கொழும்பில் நேற்றுக்காலை துப்பாக்கி முனையில் ஒன்பது லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.
தனியார் வங்கி ஒன்றில் வைப்புச் செய்வதற்கு, இந்தப் பணம் எடுத்துவரப்பட்டபோதே இனந்தெரியாத நபர்களால் சொள்ளை அடிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது
இந்தக் கொள்ளைக்காக கொள்ளையர்கள் வாகனம் ஒன்றைத் திருடி வந்ததாகவும், இந்தக்கொள்ளை பற்றி பொலிசார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.
இக்கொள்ளையில் ஜே. வி. பியினருக்கு தொடர்புள்ளதா அல்லது இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்கள் இதனை நடாத்தினர்களாளா என்பது குறித்து பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ம-சி

## வரி விளம்பரம்

### தேவை

பழைய பித்தளை, அலுமனியம் உடர் விலைக்கு வாங்கப்படும். விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்: சிவன் மாடம். 166, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சி 1495)

### தாச்சிப் போட்டி

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தால் அண்மையில் நடாத்தப்பட்ட தாச்சிப் போட்டியில் பெண்களுக்கான இறுதியாட்டம் அண்மையில் யாழ். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கும், உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்றது.

அரியாலை சரஸ்வதிசனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினர் இப்போட்டியில் வெற்றியீட்டியுள்ளனர். -154

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

### முது தத்துவமானி தகுதிகாண் தேர்வு

1994.

கலைப்பீடம்

முது தத்துவமானி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பில் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

பொருளியல், புவியியல், இந்து நாகரிகம், வரலாறு, தமிழ், மெய்யியல், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், மொழியியல், நுண்கலை, வர்த்தகம், நாடகமும் அரங்கியலும், முகாமைத்துவம்.

விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப் பீடாதிபதி அலுவலகத்தில் 23-06-1995ம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர், பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர், நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக் கட்டளையை அல்லது தபால் கட்டளையுடன் முத்திரை ஒட்டி சுய விலாசம் இடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும், 30-06-1995க்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இத்திகதியின் பின்பு வரும் விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
29-05-1995. எ 4957

---

# கொழும்புதுறைமுகம்செல்ல தமிழருக்குஅனுமதிமறுப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு உணவுப் பொருள்களை கொள்முதல செய்து கப்பலில் ஏற்றுவதற்காக கொழும்பு துறைமுகம செல்லும் தமிழர்களை கடற்படையினர் துறைமுகத்துக்குள் செல்வதற்கு அனுமதி வழங்க மறுத்து வருகின்றனர்.

தமிழர்களை துறைமுகத்துக்குள் செல்வதற்கு துறைமுக அதிகாரசபை அனுமதிப்பத்திரம் வழங்கியும் கடற்படையினர் உள்ளே செல்வதற்கு அனுமதி வழங்க மறுத்துள்ளனர்,

கொழும்பில் தமிழர்கள் வடபகுதிக்கு பொருள்களை கொள்முதல் செய்து கப்பலில் ஏற்றுவதற்கு பெரும் சிரமப்பட்டு வருவதாக கொழும்பு தகவல் ஒன்று நேற்றுத் தெரிவித்தது. 170-ரி

## உலர் உணவு விநியோகம்

(கொழும்புத்துறை)

ஊர்காவற்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பாவனையாளருக்கான உலர் உணவு முத்திரைக்கான இல, 25 பி, 26 ஏ, நிவாரண விநியோகம் தற்போது நடைபெற்று வருகிறது. (154)

---

வைத்தீஸ்வரா கல்லூரி
வர்த்தக மாணவர் மன்றம்

### அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ம் பரிசு இல; 4053 2ம் பரிசு இல: 2683
3ம் பரிசு இல: 0408

மேற்படி பரிசு இலக்கங்களுக்கு உரியவர்கள் 15-06-95க்கு முன்னர் பாடசாலை அலுவலகத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

செயலாளர்,
(சி-1497) வர்த்தக மாணவர் மன்றம்

---

குட்டி  அபிநயா!

குட்டி அபிநயா, நீ எட்டி அடி வைத்துக்
கெட்டிக்காரியாக வேண்டுமடா !
— சுட்டி

அணிலாரை நல்ல அழகாய் அடித்தாய் !
துணை வருவார் மூர்த்தித் தாத்தா
— கலா மாமி

★ (அபிநயா அச்சகத்தின் ஆண்டு நிறைவையொட்டி
''அணிலாரே'' வெளியீட்டாளர்
திருமதி கலாதேவி சத்தியசீலனின் வாழ்த்து)
[சி-1498]

---

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி அருளம்மா அந்தோனிப்பிள்ளை

தோற்றம்: 16-05-1921
மறைவு: 01-06-1989

எங்கள் நினைவில் நிலைத்திருக்கும் உங்கள் முகம்
என்றென்றும் எங்கள் உளளங்களில் பதிந்திருக்கும்:
உங்கள் நினைவே எங்கள் இதயங்களை நிறைத்திருக்கும்
உங்கள் பிரிவால துயருறும்:

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். [சி-1493]

---

# தடாக் கைதிகள் விடுதலை பரிசீலிக்க நடவடிக்கை

(புதுடில்லி)

தடா சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதுபற்றி பரிசீலிப்பதற்கு மறுவாழ்வுக் கமிட்டிகள் அமைக்கப்படும் என்று பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்,

குற்றம் செய்யாதவர்கள் யாரும் தேவையில்லாமல் வைக்கப்படுவதை அல்லது தொல்லைக்குள்ளாக்கப்படுவதை தவிர்ப்பது இதன் நோக்கமாகும் என்று அவர் கூறினார்.

தடாவிற்கு பதிலாக கொண்டுவரப்படும் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படாமல் தடுப்பதற்கும் வழக்குகளை மறுபரிசீலனை செய்வதற்கும் சட்டத்தில் சரத்துக்கள் இருக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். ரி

# இடம் பெயர்ந்தவர்கள் கல்லூரி, கோவில்களில் தஞ்சம்

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி, பத்தமேனிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தோரில் ஐம்பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்பொழுது புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் தங்கியுள்ளன

இப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தோரில் மேலும் 35 குடும்பங்கள் நீர்வேலி மாதா கோவிலில் தங்கியுள்ளனர்.

இவை தவிர மேலும் 15 குடும்பங்கள் ஆவரங்கால் சிவன் கோவிலிலும் தங்கியுள்ளன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து இப்பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் களினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது, 162 கி

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்

1ம், 2ம், 3ம் 4ம் ஆண்டு

### இறுதிப் பரீட்சை 1994

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதி வாய்ந்த சகல வருட மாணவர்களும் 09-06-95ற்கு முன்பாக யாழ். பல்கலைக்கழகம், பரீட்சைக் கிளையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மீள் பரீட்சார்த்திகள் தகுந்த கட்டண பற்றுச்சீட்டுடன் தமது விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

பதிவாளர்
(எ-4959)

---

UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.

### Faculty of Science

The examination for selecting the first year students who will be allowed to offer Computer Science as a subject for the Academic year 1994/95 will be held on 15-06-1995 from 9a.m. to 11 a.m in the Chemistry Lecture Theatre (large).

Registrar.
(A-4958)

---

## கோழிகளுக்கு தூக்கநோய்

(நெல்லியடி)

புலோலி கிழக்கு சந்தா தோட்டப் பகுதிகளில் கோழிகளுக்கு ஏற்பட்ட தூக்கநோயினால் பல கோழிகள் வீடுகளில் இறந்து வருகின்றன.

இதனால் அதிகளவில் கோழிகளை கூடுகளில் வளர்ப்பதுடன் வெளியே நடமாட முடியாத வகையில் கோழிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது, 160

---

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–06–1
வியாழன் இரவு

08-02 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 நோய்தீர்க்கும் மூலிகைகள்
08-20 உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் 'பொருண்மிய மேம்பாடு காண்போம்' சித்திரம்
08-30 செய்திகள்
08-40 யாழ். பொது நூலக எரிப்பு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி நாமகள் எழுதிய 'சாம்பலில் உயிர்த்தெழும் ஃபீனிக்ஸ்பறவையாய்'

1995–06–02
வெள்ளி காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப்பாடல்கள்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–06–01
வியாழன் மாலை

05-01 சிந்தனைச்சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 இசையும் கதையும்
06-00 சிந்தனைக்கு சில வினாடிகள்
06-02 பொன்விளையும் பூமி
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 கேள்வி பதில்
06-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

### மணிவாக்கு

தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாத மனிதன் தனக்குள் உள்ள திறமையை வெற்றியாக மாற்றமுடியாது.

— ஆலன்போ.

## நமது நோக்கு

### தணிக்கை!

ஜனதிபதி சந்திரிக்கா கொழும்பில் தேசிய தகவல் நிலையத்தை திறந்து வைத்துப் பேசுகையில் அரசு இராணுவ நடவடிக்கை, சமாதான முயற்சி, பொருளாதாரக் கட்டியெழுப்பல் ஆகியவற்றுக்கு முக்கியமளிக்கிறதென்றும் அதற்குச் சில தேசிய பத்திரிகைகள் ஒத்துழைப்புத் தருவதில்லை என்றும் அவை பொறுப்புணர்ச்சியை மறந்து செயல்படுவதாகவும் அவ்விதம் நடக்கும் பத்திரிகைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

சந்திரிக்கா எதை விரும்புகிறார்? இராணுவம் தோல்விகாணும் வேளைகளில் அதுபற்றி விமர்சிக்காது அதைப் புகழுகவா கேட்கிறார்.

சமாதான முயற்சியில் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டு பேச்சுவார்த்தையை உதறித் தள்ளிய சந்திரிக்கா கோடிக்கணக்கில் மேலதிகமாக செலவு செய்து ஆயுதக் கொள்வனவு செய்து போர்வெறிகொண்டு ஆடும் தன்னை பத்திரிகைகள் சமாதானப் பிரியை என்று புகழும்படியாகவா கேட்கிறார்.

பொருளாதாரம் கட்டி எழுப்பப்படாது உண்மையில் அது அதலபாதாளம் நோக்கிச் சரிந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் சிறிலங்கா ஆசியாவிலேயே பொருளாதாரச் சுபீட்சம் அடைந்த நாடென்று பத்திரிகைகள் வர்ணிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறாரா?

சந்திரிகாவின் எச்சரிக்கை விரைவில் பத்திரிகைகளுக்கு தணிக்கை முறை அமுலாகலாம் என்பதையே கோடி காட்டி நிற்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கடந்த பதினேழு வருட ஐ. தே. கட்சியின் ஆட்சிக் காலத்தில் பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டு சுயமாக சிந்தித்து கலைத்துறையில் புதுமைகளைப் புகுத்த விரும்பிய றிச்சாட் சொய்சா போன்ற கலைஞர்கள் கொல்லப்பட்டனர். இவ்வெதேச்சாதிகாரத்துக்கு எதிராக மக்கள் மத்தியில் எழுந்த உணர்வலைகளைப் பாவித்து தென்மாகாண சபைத் தேர்தல், பொதுத் தேர்தல், ஜனதிபதித் தேர்தல்களில் கபட நாடகமாடி ஆட்சிக்கு வந்த சந்திரிகா இப்போ தனக்கேற்றவாறு பத்திரிகைகள் நடக்கவில்லை என்று பத்திரிகைச் சுதந்திரத்துக்கு தடைவிதிக்க எண்ணுகிறார்; தணிக்கை முறையை அமுல் நடத்த முற்படுகிறார். இது ஏறிய ஏணியை காலால் தள்ளிவிடும் செயல். நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனதிபதி எதைத்தான் செய்யமாட்டார்.

# கொழும்பில் இனக் கலவரத்தைத் தூண்டும் பெரியளவு சுவரொட்டிகள்

(கொழும்பு)

இனக்கலவரத்தை தூண்டும் பெரியளவிலான சுவரொட்டிகள் கொழும்பு நகரின் பிரதான பகுதிகள் உட்பட பல இடங்களில ஒட்டப்பட்டிருக்கின்றன.

இந்தச் சுவரொட்டிகளில் சிங்களவர்களே நித்திரையிலிருந்துஎழும்புங்கள். பிரபாகரனிடமிருந்து நாட்டைக்காக்க சிங்கள இளைஞர்களே முன்வாருங்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இச்சுவரொட்டிகள்தொடர்பாக பொலிஸ்மா அதிபர் பிராங்டி சில்வா கருத்துவெளியிடுகையில்; இது தீயசக்திகளின் வேலை எனத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது தோன்றியிருக்கும் சூழ் நிலையைப் பயன்படுத்தி இனக்கலவரத்திற்கு தூபம் இடுவதற்கு சில தீயசக்திகள் மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து விழிப்பாக செயற்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கும் பொலிஸ் சுப்பிரின்டன்கள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார். ரி

# மட்டு. காடுகளில் குண்டுச் சத்தம்; குடியிருப்புகள் மீது ஷெல் தாக்குதல்

(கொழும்பு)

மட்டக்களப்பு காட்டுப் பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி தினமும், ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனல் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் தினமும் அச்சத்துடனும் பதற்றதுடனும் தமது வாழ்நாளைக் கழித்து வருகின்றனர்.

தினமும் இரவுவேளைகளில் மட்டக்களப்பு காடுகளிலும் பெரும் குண்டுச்சத்தங்களும், துப்பாக்கிவேட்டுச்சத்தங்களும் கேட்ட வண்ணமிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதலகளை தொடர்ந்து மட்டக்களப்பு விவசாயிகள் தமது வயல்களுக்கு செல்ல முடியாத நிலையிலுள்ளனர், இதனல் அவர்களின் விவசாய செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தமது முகாம்களை எந்நேரமும் தாக்கலாம் என்ற அச்சத்தை அடுத்தே படையினர் முகாம்களிலிருந்து கண்டபடி ஷெல் தாக்குதல்களை நடத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் மட்டு காட்டுப்பகுதியிலிருந்த தரவைக்குளம் இராணுவமுகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதைத் தொடர்ந்தே படையினர் இத்தகைய தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளதுகுறிப்பிடத்தக்கது

மட்டக்களப்பு காடுகளில் தனித்திருக்கும் இராணுவ முகாம்களை வாபஸ் பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ரி

# புகை பிடிப்பதனல் வருடாந்தம் 30 லட்சம் பேர் இறக்கின்றனர்

(கொழும்பு)

உலகில் வருடாந்தம் முப்பது லட்சம் பேர் புகைப்பிடிப்பதனல் ஏற்படும் நோய்களுக்குப் பலியாகின்றனர் என்று உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேலும் பத்து லட்சத்திற்கும் மேற்பட்டோர் வருடாந்தம் புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகின்றார்கள் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று சர்வதேச புகை பொருள் மறுப்புதினம் உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது, கொழும்பிலும் இத்தினத்தையொட்டி விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

உலகில் சுவாசப்பை புற்றுநோயினல் தொண்ணூறு வீதமானவரும் சுவாசப்பை அழற்சியால் எழுபத்தைந்து வீதமானவரும் இருதய நோயினல் இருபத்தைந்து வீதமானவரும் புகைப்பதனல் மரணத்தை தழுவுகின்றனர். ரி

# ஜெயலலிதா மீது மற்றொரு வழக்குதாக்கல்

## அனுமதிகோருகிறர் சுவாமி

(புதுடில்லி)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மீது மற்றொரு வழக்கு தாக்கல் செய்வதற்கு தம்மை அனுமதிக்குமாறு ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி தமிழக ஆளுநர் டாக்டர் சென்ன ரெட்டியிடம் அனுமதி கோரியுள்ளார்,

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: தடாசட்டத்தின் கீழ் தம்மைக் குற்றவாளியாக்கும் வகையில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா போலிச் சான்றுகளை தயாரித்து வருவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இது சம்பந்தமாக திரு. சுப்பிரமணியசுவாமி புதுடில்லியிலிருந்து பாக்ஸ் மூலம் தமிழக ஆளுநருக்கு செய்தி அனுப்பியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. க-இ

## அளவெட்டியில் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியை நோக்கி கடந்த செவ்வாய்க்கிழமைஇரவு ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின் போது வயோதிபப் பெண்மணிஒருவர் காயமடைந்து யாழ். போதனவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அளவெட்டியைச் சேர்ந்த திருச்சிற்றம்பலம் அன்னம் (வயது 72) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்தவராவார்.

ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி ஓட முற்பட்டபோது இவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. -90-கி

# உப உணவுப் பொருட்கள் விநியோகம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் கொழும்பில் இருந்து 'கோமாரி கப்பலில் தருவித்த உப உணவுப் பொருட்களை யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி [வருகின்றது'

இதனைவிட வாளி சைக்கிள் ரயர் ரியூப் என்பனவும் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றை சங்கங்கள் பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு வழங்கவுள்ளன. 170.சி

## திரிபோஷா வந்தடைந்தது

(நெல்லியடி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கும் திரிபோஷா சத்துணவு வழங்கப்பட்டுள்ளது.

பலமாத காலமாக இவை இங்கு வழங்கப்படாமலிருந்து வந்ததையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 160.கி

காலத்தில் பயிரிட்டு
ஈழத்தில் உயர்வடைவோம்

## சீருடை கொடுப்பனவு

(நெல்லியடி)

1994ம் வருடத்திற்கான தாதிய உத்தியோகத்தர்களுக்கான சீருடைக் கொடுப்பனவு இதுவரை மந்திகை மருத்துவமனைக்கு வழங்கப் படவில்லை,

இதேவேளை இச்சீருடைக் கொடுப்பனவு சாவகச்சேரி வல்வெட்டித்துறை போன்ற வைத்திய சாலைகளுக்கு வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 160

# இராசி பலன்

1-06-1995

வியாழக்கிழமை

[தமிழுக்கு வைகாசி-18]

திருதியை முன்னிரவு 8-42 வரை; திருவாதிரை பி. ப. 3·07 வரை: மரணயோகம், இராகுகாலம் பி. ப. 1.22 முதல் 2·52 வரை சுபவேளை காலை 7-22 முதல் 8·52 வரை

மேடம்: பெரிய மனிதர் தொடர்பு, பொருள்வரவு, புதிய பொறுப்பு

இடபம்: புத்திரவழி செலவு மனவேதனை, கடன்சுமை

மிதுனம்: முயற்சிகளில் வெற்றி, சகோதர நன்மை, கௌரவம்

கடகம்: ஆரோக்கிய பாதிப்பு நண்பர் கவலை, அலைச்சல்

சிங்கம்: உறவினர் வருகை பெற்றேர் அறிவுரை, பயணம்

கன்னி- தொழில் நிம்மதி, வருவாய் அதிகரிப்பு, தெய்வீகசெலவு

துலாம்: குடும்பகுழப்பம், அமைதியின்மை, யோசனை

விருச்சிகம்: உடல் நல பாதிப்பு, கோபவார்த்தை, காரியத்தடை

தனுசு: கூட்டுமுயற்சி, வாக்குவன்மை, இனியஉறவு

மகரம்: கணவனின் பாராட்டு, குடும்பசுகம், கலகலப்பு

கும்பம்: கருத்துவேறுபாடு அதிகாரிகள் சினம், மனவெறுப்பு

மீனம்: தொழில் மாற்றம், கண்டிப்பு, தன்நிலை இழப்பு

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### மடக்க முயன்றல்..,!

இந்திய நீதிமன்றம்— இந்தியா அடிமையாக இருந்த வேளை— நீதிபதி வெள்ளைக்காரர்... இந்தியத் தேசியத் தலைவர் ஒருவர் வாதிட்டுக் கொண்டிருக்கிறர்.

அருமையான ஆங்கிலத்தில்... டல திறமையான வாதங்களை... பலர் வியக்கும் வண்ணம் கூறிக்கொண்டிருக்கிறர்.

இந்தியர் இப்படித் திறமையாக வாதிடுவதா? என்று பொறுமைப்பட்டு, அவரை மடக்க நினைத்து "கற்றறிந்த வழக்கறிஞரே! நீர் கூறுவதை ஒரு காதால் கேட்டு மறு காதால் வெளிவிட்டுக் கொண்டிருக்கிறேன்!" என்றராம் நக்கல் தொனியோடு!

வழக்கறிஞர் கிறங்கவில்லை. "உண்மைதான், கனம் நீதிபதியவர்களே? வெளியே விடாது, தடுத்து நிறுத்தி வாதங்களை விளங்கிக்கொள்ளக் காதுகளுக்கிடையே எதுவுமே இல்லை என்பதை நான் அறிவேன்!" என்றராம் அடக்கத்துடன்!

வெள்ளையர் முகம் கறுத்துவிட்டதாம்!

— மயூரன்

நல்லூர் மின்நூலகம்



# கெரில்லாப் போராட்டம் தோல்வி கண்டதாக வரலாறில்லை

[உலகில் அடக்கப்பட்ட ஓர் இனம் பிரிவினை கோரி நடாத்திய கெரில்லாப் போராட்டம், தோல்வி அடைந்ததாக வரலாறு இல்லை. இக்கெரில்லாப் போராட்டங்களின் வெற்றி குறித்து 'சண்டே லீடர்' பத்திரிகையில் அட்றியன் விஜேமான என்பவர் எழுதிய கட்டுரை இங்கு தரப்படுகிறது.]

உலகத்தில் பல வகையான போர்கள் இடம் பெறுகின்றன, எனவே முதலில் எவ்வகையான போரில் நாம் ஈடுபட்டிருக்கிறோம் என்பதனைக் கண்டறிய வேண்டும். தற்போது இந்த நாட்டில் நடைபெறுவது ஒரு கெரில்லாப் போராகும். இதுவும் குறிப்பிட்ட பிரதேசத்தை அந்தக் கெரில்லாக்கள் கைப்பற்றிய நிலையில், அவர்களுடைய பிரதேசத்தில் இந்தப் போர் நடைபெறுகிறது. முஸ்லிம்களால் நடத்தப்படும் பொஸ்னிய ஹெட்சகொவின அரசிலிருந்து பிரிந்துபோக, பொஸ்னியச் சேர்பியர்களால் நடத்தப்பட்டுவரும் சமகாலப் பொஸ்னியப் போர் போன்றதாகவே இங்குள்ள நிலைமையும் உள்ளது. அரச படைகளை முறியடித்து, இவர்களும் ஒரு பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்தபடி ஒரு கெரில்லாப் போர் முறையைக் கையாளுகிறார்கள்.

ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய சர்வதேச சமூகம், பொஸ்னிய ஹெட்சகொவின அரசின் தேசிய ஒருமைப்பாட்டைப் பேணுவதற்காக உதவ முன்வந்தபோதும், தற்போது பொஸ்னிய-சேர்பிய கெரில்லாக்களை வெல்ல அல்லது முறியடிக்க இயலாதென்பதை உணர்கின்றன. பொஸ்னிய-சேர்பியக் கெரில்லாக்களை இராணுவ ரீதியில் அடக்க வேண்டுமாயின், சர்வதேச சமூகம் பொஸ்னியாவில் 2ம் உலகப் போரில் பங்குபற்றிய துருப்புக்களுக்குச் சமமான தொகைத் துருப்பினரைச் சண்டையில் ஈடுபடுத்த வேண்டும் என மேற்கு நாட்டு ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அந்தப் போரில் பல்லாயிரம் துருப்பினர் பல காலமாகப் போரிட்டது குறிப்பிடத்தக்கது. இப்படியான ஒரு நிலைக்கு எந்த ஒரு மேற்குலக நாடோ அல்லது நாடுகளின் கூட்டமைப்போ இறங்குவதற்குத் துணியாது.

இன்னும் வட அயர்லாந்தில் பிரிட்டிஷ் அரசு, ஐ.ஆர்.ஏ. கெரில்லாக்களுடன் கடந்த 26 வருடங்களாகப் போரிட்டு வந்துள்ளது. ஐ. ஆர். ஏ. கெரில்லாக்களுக்கு ஒரு குறிப்பிட்ட பிரதேசம் கட்டுப்பாட்டில் இல்லாதபோதிலும் அவர்களை வெல்ல முடியவில்லை. இங்கு அரசுப் படைகளுக்கு இணையாக அவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு ஒன்றாக உள்ளது.

இன்னும் காஷ்மீரில் 16 இந்திய இராணுவத்திற்கு ஒரு கெரில்லா என்ற ரீதியில், காஷ்மீர் கெரில்லாக்களுக்கு எதிராகப் போரிட்டபோதிலும் வெற்றி அடைந்ததாக இல்லை.

சிறிலங்கா அரசை எடுத்துக்கொண்டால், 16 இராணுவத்திற்கு ஒரு புலிப் போராளி என்ற ரீதியில் உள்ளது. இந்த விதமான போரில் இவர்கள் 6இல் ஒரு பங்கினரையே ஈடுபடுத்துவதாக —இவ்விதமான போரில் ஈடுபடும் அரசுக் கணிப்பிலிருந்து தெரிய வருகிறது எப்படி படையை அதிகரிப்பினும் எங்கும் சரி மரபுவழிப்போரில் படையினர் கெரில்லாக்களை அழித்து வெற்றிகண்டதாக இல்லை.

இலங்கை அரசு ஈடுபடுத்தியிருக்கும் படையினரின் விகிதாசாரத்தைப் பார்க்கும்போது, போரில் வெல்வதென்பது ஒரு முட்டாள்தனமான எண்ணமாகும்.

மலேசியா, புறூனே, ஓமான் போன்ற நாடுகளில் தீவிரவாதத்தை இராணுவ ரீதியில் வெற்றிகண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மலேசியாவில்

பிரிட்டிஷாரின் ஆட்சிக்கெதிராக கம்யூனிஸ்டுகளின் எழுச்சியே மலேசியாவில் நடைபெற்றது. அது கெரில்லாப் போராட்டமாக இருக்கலாம். எனினும் நாட்டை இரண்டாகப் பிரிக்கப் போராடிய கெரில்லாப் போராளிகள் அல்ல. அது இலங்கையில் ஜே.வி.பியினர் நடத்திய போராட்டம் போன்றது அரசியல் மாற்றுக் கருத்துக்கொண்ட கெரில்லாக்களின் எழுச்சியாகும். பிரிவினைக்குப் போராடும் தேசிய கெரில்லாப் போராட்டத்திற்கும் அதற்கும் பல்வேறுவகையில் வித்தியாசம் உண்டு.

## புறூனே, ஓமான்

புறூனே, ஓமான் ஆகியநாடுகளில, ஆட்சியிலுள்ள சுதேசிகளுக்கு எதிராக இன்னொரு சுதேசிகளின் எழுச்சியே அந்த நாடுகளில் இடம்பெற்றது. புலிகள் இங்கே 11 ஆண்டு காலமாக அரச பிரதேசத்தை கட்டுப்பாட்டில்வைத்திருப்பது போன்று அங்கு எந்த கெரில்லாக்களும்வைத்திருக்கவில்லை. அவை கூட பிரிவினைக்குபோராடும் தேசிய கெரில்லாக்களாகவும் இல்லை.

## பிரிட்டன்-அயர்லாந்து

ஐக்கிய இராச்சியம் — அயர்லாந்தில் கடந்த 300 ஆண்டு காலமாக கெரில்லாப் போர்நடந்தது. பெரிய பிரித்தானியா 1922-ம் ஆண்டு இரண்டாகப் பிரிந்ததோடு அது முடிவுக்கு வந்தது. அது கெரில்லாக்கள் ஒரு பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு தமது சொந்த மண்ணில் கெரில்லாப்போரை நடத்தினார்கள். அந்தப் போரில் 100 அரச படைக்கு ஒரு கெரில்லா என்ற ரீதியில் போர் இடம்பெற்றும் கெரில்லாக்களின் கையே மேலோங்கியுள்ளது.

## பாகிஸ்தான் - பங்களாதேஷ்

பாகிஸ்தான்—பங்களாதேஷ் பிரிவினைப் போரில் முக்தி வாஹினி இயக்கம் 10 வருடமாக கெரில்லாப்போர் நடத்தியது. 1971-இல் இந்தியாவின் தலையீட்டோடு பங்களாதேஷ் வேறாகப் பிரிந்தது. இங்குகூட ஒரு கெரில்லாவுக்கு ஈடாக அதிகபடையினரை ஈடுபடுத்தியும் அது சாத்தியப்படாமல் போக இந்தியத்தலையீட்டுடன் தான் அது முடிந்தது.

## சைப்பிரஸ்

சைப்பிரஸ், துருக்கிய-சைப்பிரஸ் கெரில்லாக்கள் கிரேக்க-சைப்பிரஸ் ஆட்சிக்கு எதிராக தங்கள் பிரதேச சுதந்திரத்திற்காகப் போராடினர். 1974இல் துருக்கிய நாட்டுத் தலையீட்டோடு அது முடிவுக்குவந்தது. சைப்பிரஸ் இரண்டாகப் பிரிந்த பின்தான் சமாதானம் அங்கு நிலவியது,

## எதியோப்பியா - எரித்திரியா

எதியோப்பியாவில் எரித்திரிய போராட்டமும் ஈழப் போராட்டம் போன்றதாகும். எரித்திரிய மக்கள் புரட்சி விடுதலை முன்னணியினர் 30ஆண்டு காலமாக அங்கு பிரிவினை கோரிகெரில்லாப்போர் நடத்தி ஈற்றில் 1993இல் எரித்திரிய நாடு சுதந்திரமடைந்ததோடு வெற்றி பெற்றனர். எத்தியோப்பியா இரண்டாகப் பிரிந்த பின்பே அங்கு சமாதானம்நிலவியது. அங்கு மோதல் நிகழ்ந்த காலத்தில் எதியோப்பிய அரச படை எரித்திரிய கெரில்லாக்களை அழித்தபோதும் எரித்திரியர்களின் மண்ணில் அவர்களை வெல்ல முடியாமற் போயிற்று.

[கே - சி]

( நாளை தொடரும் )

---

# யாழ். அனுப்பமுடியாது கொழும்பில்தவம்கிடக்கும் மோட்டார் சைக்கிள்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 40 மோட்டார் சைக்கிள்கள் கொழும்பில் தவம் கிடக்கின்றன.

யாழ். மாவட்டங்களில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் கிராமசேவையாளர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கென இந்த மோட்டார் சைக்கிள்கள் கொழும்பில் கொள்முதல் செய்யப்பட்டு வடபகுதிக்கு அனுப்பமுடியாமல் கடந்த இருமாதகாலமாக தேங்கி கிடக்கின்றன.

இவ்மோட்டார் சைக்கிள்களை கப்பலில் கொண்டுவருவதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு அனுமதிவழங்க மறுத்துள்ளது. 170-சி

# வீதி விளக்குகள் விஷமிகளால்சேதம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகராட்சிமன்றப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் வீதி விளக்குகள் தொடர்ந்து விஷமிகளால் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

இரவு நேரங்களில் மக்கள் ஓரளவு வெளிச்சத்தில் பயணத்தை மேற்கொள்ளுவதற்கு வசதியாக யாழ் மாநகராட்சி மன்றம் இவ்வீதி விளக்குகளை பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் அமுல்படுத்திவரும் இவ்வேளையில் விஷமிகள் சிலர் வேண்டும் என்று வீதி விளக்குகளை உடைத்து அதற்குள் இருக்கும் சிமினிலாம்புகளை எடுதது செல்வது கவலைக்குரியது என்று மாநகர பொறியியலாளர் வே, நவரத்தின ராசா தெரிவித்தார்.

தற்சமயம் எரிபொருளுக்கு [illegible]ாடு நிலவுகின்ற [illegible]திலும் இந்த திட்டம் ஒரு போதும் கைவிடப்படமாட்டாது என்றும் திரு. நவரத்தினராசா கூறினார். 170 -சி

# குமணவில் உணவுபொருள் எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் சில ''குமண'' கப்பலில் உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு கொழும்பில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை இக்கப்பலில் உணவுப் பொருட்களை ஏற்றி வரும் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் இம்முறை உணவுப் பொருள்களை ஏற்றிவரமாட்டாது. 170-ரி

# நிவாரணம் வழங்க ஏற்பாடு

(நெல்லியடி)

பலாலி இராணுமுகாம் பகுதிகளிலிருந்து மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்களையடுத்து இடம் பெயர்ந்திருக்கும் மக்களின் நலன்கருதி நிவாரணம் வழங்க வடமராட்சி வடக்கு பி. ப. தச செயலர் திரு ஆ. சிவசுவாமி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் (60)

# கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(நெல்லியடி)

மந்திகை மருத்துவமனையில் இரவு வேளைகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் கடந்த பல மாதகாலமாக அதிகரித்துள்ளது

இதனால் வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளரும் ஊழியர்களும் பெரும் இன்னலடைகின்றார்கள். - 160

# அத்தியாவசியப் பொருட்கள் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் அன்றாடப் பாவனையில் இருந்துவரும் அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றான மண்ணெண்ணை நாளுக்கு நாள் விலை அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

யாழ். நகரில் சென்றவாரத்தில் ஒரு லீற்றர் மண்ணெண்ணை 40 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்தபோதிலும் இப்பொழுது இதன் விலை 65 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதேபோன்று பொதுமக்களின் அன்றாட பாவனையிலுள்ள அத்தியாவசியப் பொருட்களான தேங்காய் எண்ணை, தீப்பெட்டி, சவர்க்காரம் போன்ற பொருட்களின் விலைகளும் சென்ற வாரத்திலும் பார்க்க இப்பொழுது அதிகரித்துக் காணப்படுகிறது. 162

# பிரதமர் ராவ் வை. கோ. சந்திப்பு

(புதுடில்லி)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி நேற்று முன்தினம் பிரதமர் பி. வி. நரசிம்மராவை சந்தித்து பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளார்.

தமிழகத்தின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு குறித்து இருவரும் விரிவான முறையில் பேச்சு வார்த்தை நடாத்தியதாக சென்னையில் நேற்று முன்தினம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக

# வெளிநாட்டமைச்சின் அரசியல் பழிவாங்கல் விசாரணைக்குழு அறிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டு அமைச்சில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கென நியமிக்கப்பட்ட குழு அதன் அறிக்கையை வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் நேற்று முன்தினம் கையளித்தது. இக்குழுவிடம் 655 முறைப்பாடுகள் கிடைத்துள்ளபோதிலும் 179 முறைப்பாடுகளே இந்த அமைச்சுக்குப் பொருத்தமானவை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குழுவின் முடிவுகள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் கதிர்காமர் தெரிவித்தார். ரி

# சுத்திகரிப்புத் தொழிலாளருக்கு விரைவில் பதவி உயர்வு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் சிலருக்கு வெகு விரைவில்பதவி உயர்வுவழங்கப்படவுள்ளது,

வைத்திய சாலையில் தற்போது கடமையாற்றும் 17 சுத்திகரிப்பு தொழிலாளர்களின் பெயர் பட்டியலை வைத்திய சாலை நிர்வாகம் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதில் ஐந்து சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு சுகாதார அமைச்சு சாதாரண தொழிலாளியாகபதவி உயர்வு வழங்கவுள்ளது, 170-ரி

# தமிழீழ மாணவர் எழுச்சி நாள் விழா

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இம்மாதம் 6-ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறுமென விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் திரு. இன்பன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த மாணவர் எழுச்சி நாள் விழா இம்முறை மாவட்ட ரீதியாக நடைபெறும் அன்று காலை 8-30 மணிக்கு சகலபாடசாலைகளிலும் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றிவைக்கப்படும். தேசியக்கொடி ஏற்றுவதைத் தொடர்ந்து மாணவர்களின் நிகழ்ச்சிகள் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் பேச்சு, பாட்டு, நாடகம், நடனம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும், இதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து பாடசாலை வளவில் சிரமதானப் பணியில் ஈடுபடுவார்கள்.

அன்றைய தினம் பிற்பகல் 2-30 மணிக்கு மாணவர்களின் பேரணி இடம்பெறும். எமது சமயகலாசாரங்களைப் பேணும் வகையில் மங்கள வாத்தியங்களுடன் ஆரம்பமாகும்.

இப்பேரணியில் எமது கலாசாரத்துக்கு அமைவாக உடை அணிந்த மாணவர்கள் ஆசிரியர்கள் முன்செல்ல மாணவர்களின் பேரணி இடம்பெறும்.

பேரணி முடிவில் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறும். பொதுக்கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் உரையாற்றுவார்கள்.

[162]

# 'சீடான்சர்' கப்பலில் ஒவ்வொரு செவ்வாயும் தபால் அனுப்பப்படும்

## பிரதி அஞ்சல் அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இருந்து கொழும்பு மற்றும் வெளி இடங்களுக்கான தபால்கள். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் 'சீ டான்ஸர்' கப்பல் மூலம் அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் (வட மாகாணம்) ச. சடாட்சரநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கொழும்புக்கும் வடபகுதிக்குமிடையே நிலவும் போக்குவரத்துத் தடைகள் காரணமாகக் கொழும்புத் தபால்கள் அனுப்பல், கிடைக்கப்பெறுதல் ஆகியவற்றில் மிகவும் தாமதங்கள் கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. எனினும் தபால் திணைக்கள அதிகாரிகளின் கூட்டு முயற்சியினால் தற்பொழுது வடபகுதிலிருந்து கொழும்புக்காகத் தபால் பைகள் 'சீ டான்ஸர்' கப்பல் மூலமாக ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே பொதுமக்கள் தமது கடிதங்களை இக்கப்பல்களில் சேர்த்துக் கொள்ளக்கூடியதாக நேரகாலத்துடன் அஞ்சலில் சேர்க்குமாறு வேண்டப் படுகின்றனர்.

இதேபோன்று கொழும்புத் தபால்களையும் ஒவ்வொரு கப்பலிலும் எடுத்து வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டபோதும், கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் அனுமதி மறுப்பால் கடந்த வாரம் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திறிருந்து 4 தடவைகள் தபாற் பொதிகள் கப்பலுக்கு எடுத்துச் செலலப்பட்டபோதும் கப்பல்களில் தபாற் பொதிகளை அனுப்ப முடியவில்லை

இவ்விடயம் தொடர்பாக உடனடியாக யாழ். அரசாங்க அதிபர் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், அஞ்சல்தொலைத்தொடர்புப் பிரதி அமைப்பின் இணைப்புச் செயலாளர் ஆகியோருடன் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டதுடன் அத்தியாவசியச் சேவைகள் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகத் தற்பொழுது கொழும்பில் தங்கி இருக்கும் யாழ். அரசாங்க அதிபர் இவ்விடயம் தொடர்பாக நேரடி நடவடிக்கைகளை கொழும்பில் மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார். எனவே கொழும்பிலிருந்து தபால் பொதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு எங்களால் இயன்ற எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதைப் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன் எனறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். 170

# டீசல் கொண்டு வர அனுமதி மறுப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ், சுகாதார பிரிவிலுள்ள அரசினர் வைத்திய சாலைகளிலுள்ள ஜெனறேற்றர்களை இயங்க செய்வதற்காக ஏற்கனவே 50. பரல் டீசல் வழங்குவதற்கு கொழும்பிலுள்ள சுகாதாரத்திணைக்கள தலைமைப் பீடம் நடவடிக்கை மேற் கொண்ட போதிலும் பாதுகாப்பு துறை அதிகாரிகள் அதனை இங்கு கப்பலில் கொண்டு வருவதறகு தடை விதித்துள்ள தாக அறியப்படுகின்றது. இதனால் பல வைத்தியசாலைகள்ல் ஜெனறேற்ரர்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. .72)

# கிளிநொச்சியில்தொழுநோய் தடுப்பு நடவடிக்கை

[பண்டத்தரிப்பு]

கிளிநொச்சி சுகாதார பிராந்தியத்தில் தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதறகாக யாழ். மாவட்ட தொழுநோய் தடுப்பு உத்தியோகத்தர் திரு. எம், குணரத்தினம் மாதத்தில் நான்கு தினங்கள் கிளிநொச்சிக்கு சென்று அங்கு கடமையாற்றுவார் என்று தெரிவிககப்படுகின்து.

திருகோணமலையிலுள்ள வடக்கு. கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் விடுத்த அறிவிப்புக்கு இணங்க கிளிநொச்சி மாவட்டத்தில் தொழுநோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும் அதற்கான சிகிச்சைகளையும் மேற் கொள்ளுவதற்காக மாதத்தில் நான்கு தினங்களை அங்கு செலவிடவுள்ளார் என்று அறியப்படுகின்றது. 72

# உடனடி உதவியாக சமைத்த உணவு வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் போா நடவடிக்கைகளின் போது இடம்பெயர்வோருக்கு உடனடி நிவாரணமாக மூன்று தினங்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கு தீர்மானிக்கப பட்டுள்ளது

யாழ். அரச சார்பற்ற இணைய மண்டபத்தில் நடைபெற்ற நிவாரண புனர்வாழ்வு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில இம் முடிவு எடுக்கப்பட்டது.

அரச சார்பற்ற பதினறு அங்கத்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

போர் நடவடிக்கைகளின் போது இடம்பெயர்வோருக்கு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேசச் செயலர்களுடன் சேர்ந்து அரச சார்பற்ற நிறுவனங்கள் உடனடி நிவாரணப் பணியினை மேற்கொள்வதெனவும், இந்த உடனடி நிவாரணப்பணிக்குத் தேவையான உலர்உணவுப் பொருட்களை சகல அரசசார்பற்ற நிறுவனங்களும் கையிருப்பில் வைத்திருப்பதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. 162-கி

## மரண சகாய திட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கம் அங்கத்தவர்களின் நலன் கருதி மரண சகாய திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

மரணமடையும் அங்கத்தவர் ஒருவரின் குடும்பத்திற்கு 3000 ரூபா இத திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை மத்தியகால கடனாக 10 ஆயிரம் ரூபாவையும், தனி அங்கத்தவர் கடனாக 5 ஆயிரம் ரூபாவையும் இச் சங்கம் வழங்கி வருகின்றது. -72

## ஞாபகார்த்த விழா

[நெல்லியடி]

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியின் முன்னாள் தேசிய அதிபர் செல்வி ஆர். எம். சின்னையாவின் 20வது ஆண்டு ஞாபகார்த்த விழா எதிர்வரும் 5ம் திகதி திங்கட்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண சபையின் கல்விப்பணிப்பத்ளர் செல்வி தி. பெரியதம்பி சலந்து கொள்ளுகின்றார். 160

# "விடுதலைப்போரை முழுமையாக்க நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது"

(நெல்லியடி)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முழுமையாக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது இந்த வாய்ப்பை நாம் நழுவ விடக்கூடாது. இவ்வாறு அண்மையில் செமபியன்பற்றுப் பகுதியில் இடம்பெற்ற, திருமலைத்துறைமுக தகர்ப்பில் வீரச்சாவடைந்த கரும்புலிகளின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசியதமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. வே. சிலம்பரசன் தலைமையில்நடைபெற்ற இவ் அஞ்சலிக்கூட்டத்தில் திரு. பாலகுமார் தொடர்ந்து பேசுகையில்.

ஒரு தேசிய இனம் எப்படி வழி நடத்தப்படுகிறது. என்பதை கரும்புலித்தாக்குதல் எடுத்துக்காட்டுகிறது எமது விடுதலைப்போராட்டம் முழுமையாகவெற்றியடையவேண்டும் அதில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டுஎமது போராட்டம் இன்று சர்வதேச செய்தித் தலைப்பாக மாறியுள்ளது என்றார்.

கடற்புலிகளின் அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு. இளையவன் தனது அஞ்சலி உரையில் எதிரியின் பிடியிலுள்ள திருமலையில் நடாத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல் தன்மையை நாம் உணர வேண்டும்.

இதுவரை காலமும் வடக்கிலும் வடமேற்குப் பகுதியிலும்தான் தாக்குதல் நடந்தது. தற்பொழுது கிழக்கிலும் தாக்குதல் ஆரம்பித்துள்ளோம்.

நாம் எப்படி வாழவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக கரும்புலிகள் திகழ்ந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டார். 160 ரி.

## சூழல்பாதுகாப்பு தினவிழா

[வட்டுக்கோட்டை]

வலி தெற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவினுல் சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் 5ஆம் திகதி திங்கட்கிழமை நடாத்தப்படவுள்ள சூழல் பாதுகாப்பு தினவிழாவில் வதிவிட வேளாண்மைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவில் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக வதிவிட வேளாண்மைப் போட்டி நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் பரிசில் பெற்றவர்களுக்கே பரிசுகள் வழங்கப்படவுள்ளன. 139

# 9 வருட போரில் 13,000 பீப்பா குண்டுகள் தமிழ் பகுதியில்வீசப்பட்டன

[கொழும்பு]

1983 ம் ஆண்டின்பின் வடக்கு கிழக்கு யுத்தம் தீவிரமடைந்தது முதல் 1992ம் ஆண்டுவரை 13 ஆயிரத்து 270 பீப்பாக் குண்டுகள் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் போடபபட்டுள்ளன.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார். இப் பீப்பாக் குண்டுகள் ஒவ்வொன்றும் 300 கிலோ கிராம் எடை கொண்டவையாகும்.

1992 ம் ஆண்டில் பீப்பாக் குண்டு எதனையும் தாம் வீசவில்லை எனவும் பீப்பாக்குண்டு என்றால் என்ன என்பது தனக்கு தெரியாது என்றும் விமானப்படை நடவடிக்கை தளபதி ஜயனத் வீரக்கொடி தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. கே சி

## ஹொறவப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் படுகாயமடைந்தார்.

இத்தாககுதலின்போது அம் முகாமிலிருந்த படையினர் அனைவரும் எதிர்த்தாக்குதலை தொடுக்காமல் முகாமை விட்டுத் தப்பி ஓடி காடுகளினுள் புகுந்துவிட்டனராம். இதையடுத்து அம்முகாம் புலிகளால் அழிக்கப்பட்டதாகவும் பின்னர் அந்த முகாமை படையினர் மூடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இம்முகாம் மீதான தாக்குதலில் நூற்றுக்கும் மேறபட்ட புலிகள் பங்குபற்றியிருந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. -சி

## கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்து கொழும்பு நகரெங்கும் ஆயிரக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

கொழும்பில் திரும்பும் திசையெங்கும் ஆயுதம் தரித்த படையினரே காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகள் தாக்கலாம் என்ற அச்சத்தில் வீதிக்கு வீதி, மூலைக்கு மூலை படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் சிங்களவர் கூடப் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகிறார்களாம். -சி


## விசேட அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகரசபை

யாழ்ப்பாண மாநகரசபையின் மின்சார நிலையத்தில் இயங்கிவந்த வருமான உப அலுவலகம் 01-06-95 முதல் நவீன சந்தைக் கட்டடத்தில் இயங்கும் என்பதை இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1995-05-31.

(எ-4969)

# விமானங்கள், பரசூட்களை புலிகள் மேற்கு நாடுகளில் வாங்கினர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் மேற்கு நாடுகளில் பாரமற்ற விமானங்களையும், பரசூட்களையும் விலை கொடுத்து வாங்கியுள்ளதாக இலங்கை படையினரின் வெளிநாட்டு செய்தி பிரிவு கூறியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்திற்கு முன் புலிகள் இந்த நடவடிக்கையை பூர்த்தி செய்துவிட்டதாகவும் இதில் அவர்கள் சில விமானங்களையும் பல பரசூட்களையும் கொள்வனவு செய்திருக்கலாமென தாங்கள் கருதுவதாகவும் அப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை புலிகளிடம் விமானங்கள் உள்ளதாக நிச்சயமாக கூறமுடியாதெனவும் ஆனாலும் விமானங்களை விலை கொடுத்து வாங்கமுடியுமெனதான் நம்புவதாகவும் விமானப் படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் ஐரோப்பாவில் மைக்ரோலைற், அல்ராலைற், கிளைடர் போன்ற விமானங்களில் விமானத் தாக்குதல்களுக்காக நன்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள் என விமானப் படையினர் கூறியுள்ளனர். -சி

# மூன்று கி. மீ. பாயும் ஏவுகணைகள் விடுதலைப் புலிகளிடம் உண்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை குறிபார்த்து ஏவக்கூடிய ஏவுகணைகள் சில தற்போது உள்ளதாக கூறப்படுகிறது

மோதல் தவிர்ப்பு காலத்தில் புலிகள் இந்த ஏவுகணைகளை வெளிநாடுகளிலிருந்து பெற்றிருக்கலாமெனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன. எனினும் இவ்வாறான ஏவுகணைகள் எதுவும் புலிகளிடம் இல்லையென சில இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

விடுதலைப் புலிகளிடம் தற்போது எவ்வாறான ஏவுகணைகள் உள்ளன என்று எதுவும் தெரியாத நிலையில் படையினர் உள்ளதால் இராணுவ நடவடிக்கைகளை தொடர்வதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, புலிகளிடம் உள்ள ஏவுகணைகள் பற்றி புலனாய்வுத் துறையால் கண்டுபிடிக்க முடியவில்லையாம். சி

# இந்தியப் படைகளை அழைக்க இலங்கை இராணுவம் எதிர்ப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் இந்தியப் படைகளை இலங்கைக்கு அழைப்பதற்கு இலங்கைப் படை அதிகாரிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இது குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி சந்திரிகா பங்குபற்றிய கூட்டத்தில், இந்திய படைகள் வந்தால் இலங்கையில் இந்தியா நிரந்தர தளம் அமைத்துவிடக் கூடும் என படை அதிகாரிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இதேவேளை எந்த நாட்டில் இருந்தும் மனித வளத்தை (படையினரை) உதவியாகப் பெறுவதில்லை எனவும் முடிவெடுக்கப்பட்டது. எனினும் நிலைமை உக்கிரமடைந்தால் மட்டும் இந்தியப் படையின ஒத்துழைப்பை நிபந்தனையின்றிப் பெற்றுக்கொள்ளலாமென்று அரசு கருதுகிறது. அரசின் இந்த யோசனைக்கே படை அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். -சி

★ வடபகுதிக்கான

# நானூறு தபால் பொதிகள் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன

[யாழ்ப்பாணம்]

யாழ், மாவட்டத்திற்குரிய சுமார் 400 தபால் பொதிகள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள முக்கிய தரம் பிரிக்கும் அலுவலகத்தில் இவை இருப்பதாக நேற்று வடமாகாண பதில் உதவி அஞ்சல் நாயகம் எஸ். சடாச்சரநாதனுக்கு யாழ். செயலக தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது. இந்த தபால் பொதிகளை கப்பலில் அனுப்பி வைப்பதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி நேற்று வரை கிடைக்கவில்லை என்றும் கொழும்பு மத்திய தரம் பிரிக்கும் அலுவலக உதவி அத்தியட்சகர் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை வடமாகாண பதில் உதவி அஞ்சல் நாயகம் தபால் தொலை தொடர்பு பிரதி அமைச்சின் இணைப்பு செயலாளர் எ. சிவபுரத்தரசனுடன் செயலக தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தபால் பொதிகளை கப்பலில் தாமதமின்றி அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொண்டார். -170-சி

## அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களாகும்.

ஏப்ரல் 19ம் திகதி போர் நிறுத்த உடன்பாடு முறிவடைந்ததை தொடர்ந்து இலங்கை அரசின் நிலைகுறித்து இந்திய சஞ்சிகை 'புரன்ட்லைனி'ல் எழுதப்பட்ட கட்டுரையில் இந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

'புரன்ட்லைன்' மேலும் தெரிவிக்கையில்; இலங்கை அரசுக்கு தற்போது இரண்டு வழிகள் உண்டு. ஒன்று இலங்கைக்கு உதவும் நேச நாடுகளுடன் இணைந்து இராணுவ தாக்குதலை மேற்கொள்வது. இது ஒரு சுலபமான விடயமல்ல. ஏனெனில் இதனால் பல பொதுமக்களின் இழப்புக்கள் ஏற்படும். இரண்டாவது, சர்வதேச ரீதியிலான மூன்றும் தரப்பினரை அழைத்து மத்தியஸ்தம் வகிக்கச் செய்தலாகும் என்றும் அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கே-சி

## திரியாய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டு வருவது பாதுகாப்பு அமைச்சிற்குபெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாம்.

திரியாய் பகுதியில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## பரீட்சைகள்

[யாழ்ப்பாணம்]

இலங்கை நிர்வாக சேவை திறந்த பரீட்சை யூன் மாதம் 24-ம் திகதி கொழும்பில் நடைபெறுமென கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயம்போல் தெரிவித்தார்.

இதேவேளை பொது எழுதுநர் பரீட்சை யூன் மாதம் 17 ம் திகதி யாழ்ப்பாணத்திலும், சிற்றி அன்ட் கிஸ்ட் பரீட்சை யூன் மாதம் 19-ம் திகதி கொழும்பிலும் நடைபெறுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. -162-சி

## கனேடிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கமாகவே இவரது விஜயம் அமைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது, கே-சி

## வழமை நிலைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் உள்ளனர்.

விமானங்களில் ஏவுகணை எதிர்ப்புகருவிகள் பொருத்தப்பட்டாலும் விமானங்கள் புலிகளின் ஏவுகணைகளிலிருந்து தப்புமா? என்பது கேள்விக்குறியாகவே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

## இராணுவ

[1ம் பக்கத்தொடர்ச்சி]

மொன்றிடம் விமானஎதிர்ப்பு ஆயுதம் இருப்பது பற்றி அத்தூதரக அதிகாரிகள் மிகுந்த கவனத்தை செலுத்தினராம். இலங்கை அரசு விரும்பினால் தமது நாடுகள் ஆயுதங்கள் வழங்கத் தயார் என அவர்கள் அமைச்சர் ரத்வத்தைக்கு தெரிவித்துள்ளனராம். சி

# மாமி 'ஆமி'யானார் மக்கள் பாய்ந்தோட்டம்

[பளை]

ஆலங்கேணியிலிருந்து கிளாலிநோக்கி வந்தகொண்டிருந்தபடகொன்றில் இருந்த பயணிஒருவர் மாமிமாமி'என போட்டகூச்சலில்அருகில்வந்த படகுகளில்வந்தவர்கள் 'ஆமி' என நினைத்து கடலில் பாய்ந்து பெரும் அல்லோலகல்லோலப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்றஇச்சம்பவம்பற்றி தெரியவருவதாவது: படகொன்றில் வந்துகொண்டிருந்த பெண் ஒருவரின் 'பாய்க்'கிலிருந்த நகை, பணம் என்பவற்றை அப்படகில் வந்த ஒருவர் திருடமுயன்றுள்ளார். அப்பெண்ணே தனது உடமைகளைக் காப்பாற்ற மாமி,மாமி என சத்தம் போட்டார்.

இதேவேளை அருகில்வந்த படகுகளில் இருந்தவர்கள் ஆமி என நினைத்து ஆமி ஆமி எனக் கத்திக்கொண்டு கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்து 'ஆமி ஆமி' எனக் கத்திக் கொண்டுஓடத்தொடங்கினர். இதனால் கிளாலி கரையிலிருந்தவர்கள் மோட்டார்சைக்கிள்களை எடுத்துக்கொண்டு ஓடிய போது பலர் காயமடைந்தனர். இதில் படுகாயமடைந்த சிலர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உடனடியாக அங்கு வந்த புலிகள் நிலைமையை அறிந்து மக்களை அமைதிப்படுத்தினர். 156 சி

# சிங்கள கிராமவாசிகளுக்கு தீவிர ஆயுத பயிற்சி

[கொழும்பு]

வடக்கு—கிழக்கில் எல்லைக் கிராமங்களில் உள்ள சிங்களவருக்கு தீவிர ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

எல்லைக் கிராமங்கள் மீது தாக்குதல்களை நடாத்த புலிகள் திட்டமிட்டிருப்பதாகக் கூறியே கிராமவாசிகளுக்கு இந்த ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கப்பட்டு வருகிறது,

ஆயுத பயிற்சி வழங்கப்பட்டவர்கள் தினமும் 'இரவு பகலாக பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவியாக ஊர்காவல் படையினரும நிறுத்தப்பட்டுள்ளனராம். -சி

# என். எஸ். எஸ். பி உறுப்யுனர்கள் எல். எஸ் எஸ் பியில் இணைவு

[கொழும்பு]

நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த 658 முன்னணி உறுப்பினர்கள், லங்கா சமசமாஜக் கட்சியில் சேர்ந்துள்ளனர்.

நவசமசமாஜக் கட்சியில் இன்று விலகிய இந்த உறுப்பினர்கள், வாசுதேவநாணயக்காராவைப் பின்பற்றி தாம் சமசமாஜக்கட்சியில் சேர்ந்துள்ளதாக அறிவித்துள்ளார்.

இதனால் நவசமசமாஜக் கட்சி நெருக்கடியை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

## இராணுவத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறை இணை அமைச்சர் சான்ஸ் பி. பி. சி. க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

கனடாவிலிருந்து மூத்த அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்வது கடந்த 12 வருடங்களில் இதுவே முதல் தடவையாகும்,

சமாதான முயற்சிகள் முறிவடைநதது தமக்கு ஏமாற்றமளிப்பதாக கூறிய திரு. சான்ஸ் பி. பி. சிக்கு வழங்கிய பேட்டி இங்கே தரப்படுகிறது.

கே: அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிளவை எப்படிச் சரி செய்யப்போகிறீர்கள்?

ப- விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு நாங்கள் கேட்கிறோம். அதேநேரம் சமாதான முயற்சிகளை தொடரும்படி அரசாங்கத்தையும் கேட்கிறோம்.

கே: தங்களது கோரிக்கைகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை என புலிகள் கருதுகின்றனர். எனவே சமாதான முயற்சிகள்தான் நல்லது என்பதை புலிகளுக்கு எப்படி உணர்த்தப் போகிறீர்கள்?

ப: சமாதானமும் சமாதான பேச்சுவார்த்தைகளும் இராணுவத்தீர்விலும் பார்க்கசிறந்தது என்பதை அமைதி நிலவிய காலங்களில் மக்கள் நிச்சயம் உணர்ந்திருப்பார்கள் என்பதை நான் திடமாக நம்புகிறேன் இதை இரு தரப்பினரும் உணரவேண்டும்.

கே; விடுதலைப் புலிகள் தலைவர்களை சந்திக்கும் நோக்கம் உண்டா?

ப: இம்முறை இல்லை. எமது பார்வையாளர்கள் இங்கிருக்கிறார்கள், அவர்கள் புலிகளுடன் தொடர்பு வைத்திருக்கிறார்கள். அவர்கள்தான் புலிகளிடம் நாம் வைத்திருக்கும் முக்கிய தொடர்பு என்றார், கே-சி

# பங்கீட்டு அடிப்படையில் மண்ணெண்ணை

[ஆனைப்பந்தி]

'மாகோ' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள மண்ணெண்ணை மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படவுள்ளது.

பங்கீட்டு அட்டையொன்றிற்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணை லீற்றர் இருபத்தைந்து ரூபா விலையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படும்,

ப. நோ. கூ. சங்கங்கள் தமக்குரிய ஒதுக்கீட்டினை புனர்வாழ்வுப் பகுதிக் களஞ்சியத்திலும், பருத்தித்துறை இறங்குதுறையிலும் பெற்று இவ்விநியோகத்தை மேற்கொள்ளுமாறு புனர்வாழ்வுப் பகுதி திட்டப் பணிப்பாளரின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -101-சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence number B/1683613.